Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
MONDAY, JULY 14 2025

திங்கட்கிழமை 14, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 282 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



# “தமிழர் தரப்பை குற்றவாளியாக்க முயற்சி”

■ எஸ்.கணேசன்

இனப்படுகொலை மற்றும் போர் குற்றங்களில் ஈடுபட்ட படையினர் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, தமிழர் தரப்பைக் குற்றவாளியாகக் காண்பிக்கும் முயற்சி இடம்பெறுகின்றது என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் அதிபராக (2022), ஹட்டன் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற மாயழகு சந்திரலேகா கிங்ஸ்லியின் (SLEAS class I) பணி நயப்பு விழா கொட்டகலை ஆசிரியர் கலாசாலை சமூகத்தினரால் கொட்டகலையில் சனிக்கிழமை (12) நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## அமெரிக்கத் தூதுவர் எரிக் மேயர்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக அமெரிக்க இராஜதந்திரி எரிக் மேயரை (Eric Meyer) வெள்ளை மாளிகை பரிந்துரைத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், எரிக் மேயரின் பெயரை அமெரிக்க செனட்டில் உறுதிப்படுத்துவதற்காகப் பரிந்துரைத்துள்ளார்.

எரிக் மேயர் தென் மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான சிரேஷ்ட அதிகாரியாக இந்தியா, ஆப்கானிஸ்தான், இலங்கை, மாலைத்தீவுகள் உள்ளிட்ட 13 நாடுகளில் நிர்வாகத்தின் கொள்கை முன்னுரிமைகளை ஒருங்கிணைப்பதற்கும், பணியகங்களை மேற்பார்வையிடுவதற்கும் பொறுப்பாளராக செயற்படுகிறார்.

## பிரதம நீதியரசர் ஓய்வு



பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி முர்து பெர்னாண்டோ எதிர்வரும் 27ஆம் திகதி ஓய்வு பெற உள்ளார்.

அதன்படி, அடுத்த பதினைந்து நாட்களுக்குள் புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட வேண்டும், மேலும், அதற்கான அரசியலமைப்பு சபையின் ஒப்புதல் பெறப்படும்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக சட்டமா அதிபர் துறையில் பணியாற்றிய பின்னர் முர்து பெர்னாண்டோ பிரதம நீதியரசர் பதவியை ஏற்றுக் கொண்டார்.



## 21 அதி சொகுசு மோட்டார் சைக்கிள்கள் சிக்கின

நாட்டிற்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 21 மோட்டார் சைக்கிள்களுடன் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். முழுச் செய்தி P3

### பெருந்தோட்டத் தொழிலாளர்களின்

## “சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி தலையிடுவார்”

■ எஸ்.கணேசன்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி நேரில் தலையிட்டு வெகுவிரைவில் தீர்வை வழங்குவார் என்று தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் அதிபராக (2022), ஹட்டன் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற மாயழகு சந்திரலேகா கிங்ஸ்லியின் (SLEAS class I) பணி நயப்பு விழா கொட்டகலை ஆசிரியர் கலாசாலை சமூகத்தினரால் கொட்டகலையில் சனிக்கிழமை (12) அன்று நடத்தப்பட்டது.

கலாசாலை அதிபர் சு.பிரசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

தொடர்ச்சி P2

## பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்து

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தி மட்டக்களப்பு காத்தான்குடியில் சம உரிமை இயக்கத்தினால் கையெழுத்து பெறும் நடவடிக்கை (12) சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இன்னொரு அடக்குமுறை சட்டம் வேண்டாம் காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதாவது நீதி வழங்கு

அனைத்து தேசிய இனத்தவர்களுக்கும் சம உரிமைகளை உறுதி செய்யும் புதிய அரசியல் அமைப்புக்காகப் போராடுவோம் என இதன் போது வலியுறுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2



## “ஆரோக்கியமான நபர்களாக மாற்றுவது பொறுப்பு”

### யாழில் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்குத் தேவையான அனைத்து மருத்துவ மற்றும் பராமரிப்பு சேவைகளையும் வழங்கி அவர்களை ஆரோக்கியமான நபர்களாக மாற்றுவது சுகாதாரத் துறையில் பணிபுரியும் அனைவரின் பொறுப்பு என்று

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.


யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு சனிக்கிழமை (12) அன்று விஜயம் மேற்கொண்ட அவர், நோயாளிகளின் பாரமரிப்பு சேவையை வினைத்திறனுடன் முன்னெடுக்க அறிவுறுத்தல்களை வழங்கினார். பல பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தார்.

வட மாகாணத்தின் பிரதான மற்றும் ஒரே போதனா வைத்தியசாலையான யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ சனிக்கிழமை (12) பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளைச் சிறந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்படுத்துவதன் மூலம் வட மாகாண மக்களுக்கு வினைத்திறனான சுகாதார சேவைகளை வழங்கும் நோக்கில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் இந்த சிறப்பு ஆய்வு விஜயத்தை மேற்கொண்டார்.

தொடர்ச்சி P2

## செவ்வந்தியின் தாய் மரணம்



புதுக்கடை நீதவான் நீதிமன்ற, சாட்சிக்கூண்டில் வைத்து 2025 பெப்ரவரி 19ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட பாதாள உலக கோஷ்டியின் தலைவர் கணே முல்ல சஞ்சீவ கொலை வழக்கில் தேடப்பட்டு வரும் சந்தேக நபரான இஷாரா செவ்வந்தியின் தாயார் காலமானார்.

தலைமறைவான இஷாரா செவ்வந்தியை தேடிய பொலிஸார், இஷாரா செவ்வந்தியின் தாய் மற்றும் தம்பியைக் கைது செய்து நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இஷாரா செவ்வந்தியின் தாய்க்கு ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2



## நெடுந்தீவு படகு விபத்தில் சிக்கிய 14 பேர் மீட்பு

யாழ்ப்பாணத்தில் உள்ள நெடுந் தீவுக்கு கடல் வழியாகச் சென்ற சுற்றுலாப் படகு கவிழ்ந்ததில், அதில் இருந்த 14 பேர் நீரில் மூழ்கிய நிலையில் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள குறிகட்டுவான் ஜெட்டியில் இருந்து நெடுந் தீவுக்கு கடல் வழியாக சனிக்கிழமை (12) அன்று சென்ற தனியார் சுற்றுலாப் படகில் 12 சுற்றுலாப் பயணிகள் மற்றும் இரண்டு பணியாளர்கள் இருந்தனர். தொழில்நுட்பக் கோளாறு காரணமாகப் பாதியிலேயே நின்றுவிட்ட படகு கடலில் மூழ்கும் அபாயத்தில் இருந்தது.

அப்போது, படகில் இருந்த சுற்றுலாப் பயணிகள் வெள்ளைக் கொடியை அசைத்து உதவிக்காகக் கூச்சலிட்டனர், மேலும் அருகிலுள்ள கடல் வழியில் பயணித்த ஷபரிஷ் என்ற நீண்ட தூரப் படகில் இருந்தவர்கள், சிக்கித் தவித்த குழுவைக் கண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

### குருக்கள்மடம் மனிதப் புதைகுழி வழக்கு:

## 21ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

நகர்த்தல் பத்திரம் மூலம் வெள்ளிக்கிழமை(11) அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குருக்கள்மடம் மனிதப் புதைகுழி வழக்கு, எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

புனித ஹஜ் கடமையை நிறைவு செய்துவிட்டு 1990.07.12ஆம் திகதி அன்று வீடு திரும்பிய காத்தான்குடியைச் சேர்ந்த ஹஜ் யாத்திரிகர்கள் மற்றும் வியாபாரிகள் கல்முனை - மட்டக்களப்பு வீதியில் குருக்கள்மடம் எனும் இடத்தில் கடத்திக் காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்



# “தமிழர் தரப்பை குற்றவாளியாக்க முயற்சி”

அதில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

‘உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் உட்பட சில விடயங்களை தமிழ் தரப்புகள் தான் செய்தன என்பதுபோல, வெளியில் ஒரு மாயை காட்டப்படுகின்றது. இதற்கு பின்னால் இருந்து ஆட்சி அமைத்த கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த குடும்பம் மீது இதுவரையில் எந்த பாய்ச்சல்களையும் இந்த அரசாங்கம் செய்யவில்லை.

இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்களைச் செய்த இராணுவத் தளபதிகள் மீதோ அல்லது அதை மேற்கொண்ட அரசுகள் மீது எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில், தமிழ் தரப்பைக் குற்றவாளியாக காண்பிக்கும் முயற்சி இடம்பெறுகின்றது. இது தொடர்பில் நாம் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டும்."

மேலும் தெரிவிக்கையில், பத்து பரம்பரையாக இந்த நாட்டுக்கு உழைத்த மலையக மக்களுக்கு ஒரு துண்டு காணி கூட இன்னும் வழங்கப்படவில்லை.

‘மலையக மக்கள் 200 வருடங்களுக்கு மேலாக இம்மண்ணில் வாழ்கின்றனர். நபரொருவர், பிரிட்டனுக்கோ அல்லது கனடாவுக்கோ சென்றால் அங்கு 3 அல்லது ஐந்து வருடங்களில் குடியுரிமை கிடைக்கிறது. வீடு வழங்கப்படுகின்றது. உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கிறது.

ஆனால், இந்த நாட்டுக்காக 10 பரம்பரையாக உழைத்த மக்களுக்கு ஒரு துண்டு காணி கூட இன்னும் வழங்கப்படவில்லை. தொடர்ந்து காணி உரிமை அற்றவர்களாகவே வைக்கப்பட்டு வருகின்றனர். மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் அவர்களுக்குக் காணி உரிமையை வாங்கவில்லை. ஒரு கொட்டகையை அமைப்பதாக இருந்தால் கூட, நிர்வாகத்திடம் அனுமதி பெற வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அவர்கள் அனுமதி வழங்காத நிலையும் நீடிக்கின்றது.

வடக்கு, கிழக்கை விடவும் மலையகத்தில் காணியில்லாப் பிரச்சினை, வாழ்வியல் பிரச்சினை, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை உள்ளிட்டவை அதிகளவு காணப்படுகிறது.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படுகிற நாளாந்த சம்பளம் போதுமானது அல்ல. தற்போதைய சூழ்நிலையில் நாளொன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் கூட போதாது. நியாயமான மற்றும் நிரந்தர சம்பளம் வழங்கப்பட வேண்டும். அதற்காக இலங்கை தமிழரசுக் கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும்” என்றார்.

# “சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி தலையிடுவார்”

பிரதம விருந்தினர்களாக தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் மாணவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

கல்வி வெளியீட்டுத் திணைக்கள முன்னாள் ஆணையாளர் நாயகம் சு.முரளிதரன் கலாசாலையின் முன்னாள் மற்றும் தற்போதைய விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள், வீரகேசரி பத்திரிகையின் உதவி ஆசிரியர் சி.சிவகுமார், முன்னாள் ஆசிரியர் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

இந்நிகழ்வில் கலந்துக் கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம், மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கிலேயே உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைத்தோம். இதற்கு எவ்வித நிபந்தனையும் இன்றியே சில தரப்புகள் ஆதரவு அளித்தன. ஆட்சி அமைப்பதற்காக நாம் எந்த ஒரு டீலிலும் ஈடுபடவில்லை. எவ்வித ஒப்பந்தமும் கிடையாது. மக்கள் வழங்கிய ஆணையை மதித்து செயற்பட்டு வருகின்றோம்.

மலையகத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் நிச்சயம் விசாரணைகள் இடம்பெறும். எவரேனும் குற்றம் இழைத்திருந்தால் சட்டத்தின் பிரகாரம் நிச்சயம் தண்டனை வழங்கப்படும். எமது ஆட்சியில் குற்றவாளிகள் தப்ப முடியாது.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் வெகுவிரைவில் தலையிட்டு ஜனாதிபதி தீர்வை வழங்குவார். உள்ளக மட்டத்தில் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஜனாதிபதி மிக விரைவில் நடவடிக்கை எடுப்பார். சிலவேளை அரசாங்கமும் இதற்குரிய தீர்வை வழங்கலாம்” என்றார்.

# செவ்வந்தியின் தாய் மரணம்

கொலை நடந்து ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் இஷாரா செவ்வந்தி, தலைமறைவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்து



இந்த கையெழுத்துப் பெறும் நடவடிக்கையின் போது சம உரிமை இயக்கத்தினால் பொது மக்களுக்கு விழிப்பூட்டும் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

சம உரிமை இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் கிருபாகரன் அமைப்பாளர் தன்னே நானந்த தேரர் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் செயலாளரும் காத்தான்குடி நகர சபை உறுப்பினருமான சபீல் நழீமி உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.



# நெடுந்தீவு படகு விபத்தில் சிக்கிய 14 பேர் மீட்பு

ஷபரிஷ் டிடுதுரா படகின் குழுவினர் விரைந்து வந்து , படகு நீரில் மூழ்கிய வண்ணம் காணப்பட்டதனை அடுத்து, படகில் இருந்தவர்கள் தமது படகுக்கு ஏற்றியுள்ளனர். அவ்வாறு ஏற்றிய போதிலும், 12 பேர் படகில் ஏறிய நிலையில், இருவர் படகில் ஏற முதல் பழுதடைந்த படகு கடலில் மூழ்கியுள்ளது. அந்நிலையில் இருவரும் கடலில் நீந்திப் பாதுகாக்க வந்த படகில் ஏறியுள்ளனர்.

ஷபரிஸ் படகு அங்கு இல்லாதிருந்தால், உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் விபத்துக்கு உள்ளான படகில் இருந்த சுற்றுலாப் பயணிகள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளும், குழுவினரும், ஷபாரிஸ் நீண்ட தூரப் படகின் குழுவினரால் குறிகட்டுவானில் உள்ள கடற்படை அதிகாரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

# “ஆரோக்கியமான நபர்களாக மாற்றுவது பொறுப்பு”

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவுகள், அவசர சிகிச்சை பிரிவு, இருதய சிகிச்சைப் பிரிவு மற்றும் ஆய்வகங்கள், சி.டி. ஸ்கேன் பிரிவு, எலும்பியல் மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சைப் பிரிவு, , மருத்துவமனையின் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அந்தத் திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால செயல்பாடுகள் ஆகியவற்றைச் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, மருத்துவமனை இயக்குநர் மற்றும் பிற அதிகாரிகளுக்கு நோயாளி பராமரிப்பு சேவைகளை மிகவும் திறமையானதாக மாற்றுவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. தற்போதைய பிரச்சினைகள் குறித்து ஊழியர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வாய்ப்புகளை வழங்கவும் அமைச்சர் இந்த ஆய்வின் போது நடவடிக்கை எடுத்தார்.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர், மிகக் குறுகிய காலத்தில் வட மாகாணத்தில் சுகாதார சேவைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்து, யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் சேவையை வலுப்படுத்தும் நோக்கில் ஒரு ஆய்வை மேற்கொண்டார் மற்றும் சேவைகளை நெறிப்படுத்துவதற்கான வழிமுறைகளை வழங்கினார்.

இந்த விடயம் நிபுணர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர்களால் பாராட்டப்பட்டது. மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்குத் தேவையான அனைத்து மருத்துவ மற்றும் பராமரிப்பு சேவைகளையும் வழங்கி அவர்களை ஆரோக்கியமான நபர்களாக மாற்றுவது சுகாதாரத் துறையில் பணிபுரியும் அனைவரின் பொறுப்பு என்று அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மனித மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்காக எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆய்வைத் தொடர்ந்து, மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் மருத்துவமனை நிர்வாக அதிகாரி மற்றும் ஊழியர்களுடன் நீண்ட கலந்துரையாடலை நடத்தினார். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் யாழ்ப்பாண போதனா மருத்துவமனை சுகாதார சேவைகளை வழங்குகிறது.

இந்த மருத்துவமனை ஆண்டுதோறும் 20,000க்கும் மேற்பட்ட மகப்பேறு அறுவை சிகிச்சைகளையும் 5,582 பிரசவங்களையும் மேற்கொள்கிறது. மக்களுக்கு சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்காக ஆண்டுதோறும் 22,000 க்கும் மேற்பட்ட சிறு அறுவை சிகிச்சைகளும் 13,000 பெரிய அறுவை சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் அதிநவீன ஆய்வகம் நோயாளிகளுக்குப் பரந்த சேவையை வழங்குகிறது. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ், மருத்துவமனையின் உள்கட்டமைப்பு மற்றும் பணியின் தரத்தை மேம்படுத்த விரைவான மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன, இது மருத்துவமனை நோயாளிகளுக்கு உயர்தர சுகாதார சேவைகளை வழங்க உதவும்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நடைபெற்ற இந்த ஆய்வுக்காக மீன்பிடி, நீர் வாழ் உயிரினங்கள் மற்றும் கடல்சார் வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் எஸ்.ஸ்ரீபவனநாதராஜா மற்றும் கருணாநந்தன் இளங்குமரன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் இ.சத்தியராம மூர்த்தி உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள், துணை இயக்குநர்கள் டாக்டர் சி.எஸ்.ஜமுநாதன், டி.குஹதாஷன், நிபுணர்கள் உள்ளிட்ட மருத்துவமனை ஊழியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 21ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பு

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட அப்துல் மஜீத் அப்துல் ரவூப் என்பவரால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு முறைப்பாடு மேற்கொள்ள ப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றில் கடந்த 2014ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகத்திற்கிடமான மனிதப்புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாக சந்தேகிக்கப்படும் இடத்தைத் தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கையிடுமாறு உரிய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு நீதவான் கட்டளையிட்டிருந்தார்.

அதனடிப்படையில், நில அளவைத் திணைக்களம், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், தொல்லியல் திணைக்களம், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், தடயவியல் மருத்துவம் என்பன தமது ஆய்வுகளை மேற்கொண்டு குறித்த சந்தேகத்திற்கிடமான மனிதப் புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாகச் சந்தேகிக்கப்படும் இடத்தைத் தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை முடிவுறுத்தி நீதிமன்றுக்குத் திட்ட வரைபையும் சமர்ப்பித்திருந்தனர்.

இந்நிலையில், நீதிமன்றுக்கு சமர்ப்பணங்களை மேற்கொண்டிருந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார், குறித்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அதனை நீதிமன்றுக்கு அறிவிப்பதற்குத் தவணையொன்றை வழங்குமாறு மன்றுக்குத் தெரிவித்திருந்தனர்.

அதன் பிரகாரம், 04.10.2020இல் சட்டமா அதிபரினால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக குறித்த வழக்கானது கிடப்பிலிடப்பட்டிருந்தது.

இப்பின்னணியிலேயே இவ்வழக்கின் முறைப்பாட்டாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 2025.7.11ஆம் திகதியாகிய வெள்ளிக்கிழமை குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணியால் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட நகர்த்தல் பத்திரம் மூலம் குறித்த வழக்கானது திறந்த மன்றில் அழைக்கப்பட்டது.

இதன்போது, முறைப்பாட்டாளரான அப்துல் அப்துர் ரஊப் சார்பில் மன்றில் முன்னிலையாகி இருந்த சட்டத்தரணிகளின் சமர்ப்பணத்தை மிக நுணுக்கமாக ஆராய்ந்த நீதிமன்றமானது குறித்த வழக்கை எதிர்வரும் 21.07.2025க்கு தவணையிடுவதாகவும் குறித்த தினத்தில் மன்றில் முன்னிலையாகுமாறு, சட்டமா அதிபருக்கும், காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துக்கும் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கும் அறிக்கை அனுப்புமாறு நீதவான் கட்டளையிட்டுள்ளார்.

குறித்த இவ்வழக்கில் முறைப்பாட்டாளாரான அப்துல மஜீத் அப்துர் ரஊப் சார்பில் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகளான முஹைமீன் காலித், முபாறக் முஅஸ்ஸம் ஆகியோர் மன்றில் ஆஜராகி இருந்தனர்.

# “அதிபர், ஆசிரியர் இடமாற்றங்களின் சமப்படுத்தலை விரைவுபடுத்துக”

புதிய கல்வி சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக ஆசிரியர், அதிபர் இடமாற்றங்கள் சரியான முறையில் நடைபெற வேண்டும் என்றும், மாகாண மற்றும் மத்திய அரசுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும் என்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.



2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ள புதிய கல்வி சீர்திருத்தம் தொடர்பாக மாகாண, வலய மற்றும் கோட்ட மட்ட கல்வி மற்றும் நிர்வாக அதிகாரிகளை தெளிவுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தெளிவூட்டல் கலந்துரையாடல் தொடரின் முதல் கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்று சனிக்கிழமை (12) அன்று வட மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் பிரதமர் இதனை குறிப்பிட்டார்.

மேலும், இங்கு கருத்து தெரிவித்த பிரதமர்,

தற்போதுள்ள கல்வி முறை மாற்றப்பட வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிறோம், அதற்காக இந்த சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக தற்போது இருக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும், அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும், நிர்வாக கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும், டிஜிட்டல்மயமாக்கலையும் மேற்கொள்ள வேண்டும்.

மிக முக்கியமாக இந்த சீர்திருத்தத்தை தனித்தனியாகப் பார்க்க வேண்டாம், ஒட்டுமொத்த செயன்முறையிலும், அமைப்பிலும் இங்கு சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. எப்போதும் இந்த நாடு வளர்ச்சியடைந்துவரும் நாடு என்று மட்டும் கூறினால் போதாது, அந்த முறையை மாற்ற வேண்டும். அதை நாம் தான் செய்ய வேண்டும். இதனை மாற்ற வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. அதற்காக ஆசிரியர்கள் மட்டுமல்ல, நிர்வாக துறையினர், பெற்றோர்கள் உட்பட அனைவரும் ஈடுபட வேண்டும்.

மாகாண அளவில் ஆசிரியர், அதிபர் பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகளை மாகாண சபை மூலம் விரைவாக மேற்கொள்ள வேண்டும். அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட திருத்தங்களை அமைச்சு மூலம் மேற்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகள் என பிரித்துப் பார்க்க வேண்டாம். அனைத்து பாடசாலைகளும் நமதே, நமது பிள்ளைகள் தான் இருக்கிறார்கள்.

அரசாங்கம் என்ற வகையில் கல்வி சீர்திருத்தத்திற்கு நாம் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். குறிப்பாக கல்விக்காக ,மனித வளத்தை மேம்படுத்த, அடிப்படை வசதிகளை மேம்படுத்த தேவையான நிதி வசதிகளை வழங்குவேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நமக்கு இருப்பது இந்த பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு புதிய கல்வி சீர்திருத்தத்தை மேற்கொள்வதுதான். முதல் ஆண்டு நமக்கு கடினமாக இருக்கும். ஆனால், மூன்று நான்கு ஆண்டுகள் செல்லும்போது எளிதாக செய்ய முடியும்.

மாகாண அளவில் இந்த செயன்முறையை முன்னெடுக்கும் போது, இருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இந்த கலந்துரையாடல் முக்கியமானது. நம் பிள்ளைகளுக்காக இந்த மாற்றத்திற்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள்.

குறிப்பாக, வட மத்திய மாகாணத்தில் இருக்கும் ஆசிரியர், அதிபர் பிரச்சினையை அடுத்த மூன்று மாதங்களிற்குள் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# அதி சொகுசு மோட்டார் சைக்கிள்கள் சிக்கின

நாட்டிற்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 21 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பயிரிடப்பட்ட கஞ்சா செடிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் இயக்குநர் கமல் ஆரியவன்ச உள்ளிட்ட அதிகாரிகள் குழு, நாடு முழுவதும் நடைபெறும் குற்றம் மற்றும் போதைப்பொருள் சோதனை நடவடிக்கையுடன் இணைந்து, ஹம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவின் நகர வேவா பகுதியில் சனிக்கிழமை (12) அன்று சோதனையை நடத்தியது.

அங்கு, விலங்குப் பண்ணையின் மேலாளர் மற்றும் சேமிப்புக் கிடங்கின் உரிமையாளர், வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டு நாட்டிற்கு இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்ட 15 மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள 21 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் அதே பறவைத் தோட்ட வளாகத்தில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்ட 04 கஞ்சா செடிகளுடன் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் 40 மற்றும் 50 வயதுடைய மாத்தறை மற்றும் மித்தேனிய பகுதிகளில் வசிப்பவர்கள் என தெரியவந்துள்ளது.








# எல்ல சுற்றுலா விடுதி எரிந்து நாசம்

எல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கந்தே கும்புர பகுதியில் ஏற்பட்ட தீ பரவலில் சுற்றுலா விடுதி ஒன்று எரிந்து நாசமாகியுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வறண்ட வானிலை மற்றும் பலத்த காற்றுடன் வேகமாகப் பரவிய தீ காரணமாக குறித்த சுற்றுலா விடுதி எரிந்துள்ளதுடன், இந்த தீ பரவலில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பண்டாரவளை தீயணைப்புத் துறை, பொலிஸார் மற்றும் காப்பீட்டு அதிகாரிகள் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையில், தியத்தலாவை இராணுவப் படையினரின் ஒரு குழுவும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# “வடக்கில் 33 மருத்துவமனைகளில் தாதியர்கள் இல்லை”



வட மாகாணத்தில் ஒரு தாதியர் கூட இல்லாத 33 பிராந்திய மருத்துவமனைகள், உள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தாதியர்களை நியமிப்பதன் மூலம் குறித்த வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

நயினாதீவு பிராந்திய மருத்துவமனையில் புதிய வெளி நோயாளர் பிரிவு கட்டிடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# திருமலை திரியாய் ஆத்திக்காடு காணிகளை பார்வையிட்டார் டோம்

■ எஸ்.கீதபொன்கலன்

ஆசிய நாடுகளுக்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் டோம் வெல், திருகோணமலை மாவட்டத்தின் அபகரிப்பிற்குள்ளாகியுள்ள, திரியாய் ஆத்திக்காடு காணிகளை ஞாயிற்றுக்கிழமை(13) அன்று பார்வையிட்டார்.

ஆசிய நாடுகளுக்கான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர், திரியாய் ஆத்திக் காடு மற்றும் வளத்தாமலை காணிகளைப் பார்வையிட்டதுடன், குறித்த பகுதிகளில் இடம்பெற்று வரும், நில அபகரிப்பு சார் பிரச்சினைகளையும் பொது மக்களிடம் கேட்டறிந்தார்.

இச்சந்திப்பின் போது, திரியாய் ஆத்திக்காடு, வளத்தாமலை ஆலய பிணக்கு மற்றும் பௌத்த மத பிக்குவினால் சிறுபான்மை மக்களின் நிலங்கள் தொடர்ந்து அபகரிக்கப்பட்டு வருகின்றமை மற்றும் இவ்விடயங்களை வெளிப்படுத்தும் சமூக செயற்பாட்டாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் விவசாய நிலங்கள் அபகரிக்கப்பட்டமையினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள கையறு நிலை தொடர்பாகவும் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் கே.டனுஜனால் மனித உரிமை ஆணைக்குழுத் தலைவருக்கு விரிவான விளக்கமளிக்கப்பட்டது.

இவ்வருடம் இடம்பெற இருக்கும் ஜெனீவா மாநாட்டில் இப் பிரச்சினைகள் குறித்து தமது உரையில் குறிப்பிட உள்ளதாக டோம் வெல் தமக்கு உறுதியளித்தமை தமக்கு மன ஆறுதலைத் தந்ததுள்ளது என்று சந்திப்பின் பின்னர் கே.டனுஜன் கூறினார்.

# வட கடலில் சிக்கிய பாரியளவு கேரள கஞ்சா



யாழ்ப்பாணம் - எலுவை தீவுக்கு அப்பால் உள்ள புதுடு பகுதியில் இலங்கை கடற்படையினரால் சனிக்கிழமை (12) அன்று மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, 15 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் மிதந்த பையொன்றை சோதனையிட்ட போது, அந்தப் பையில். அடைக்கப்பட்டிருந்த சுமார் 38 கிலோ 700 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளால் கடத்தல்காரர்கள் கேரள கஞ்சா கையிருப்பை எலுவை கரைக்கு கொண்டு வராமல் கடலில் கைவிட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதுடன், பறிமுதல் செய்யப்பட்ட கேரள கஞ்சா கையிருப்பின் பெறுமதி 15 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் என தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா தொகை, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவல்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# சிலோன் திறந்த பல்கலைக்கழகத்தின் 3ஆவது ஆண்டு பட்டமளிப்பு விழா

■ கனகராசா சரவணன்

காத்தான்குடி மற்றும் ஓட்டமாவடி பிரதேசங்களில் இயங்கி வரும் மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழு (TVEC), சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்ற மற்றும் UK இன் NOCN இன் Exclusive Partner உம் ஆகிய Ceylon Open Campus இன் 3rd Annual Convocation Ceremony கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்(BMICH) ஜூலை 10ஆம் திகதி நடைபெற்றது.




இந்நிகழ்வை Ceylon Open Campusஇன் ஸ்தாபகரும் தலைவரும் ஆகிய Afrath Ahmath LLB(Hons) தலைமை தாங்கியதுடன் பிரதம அதிதியாக மட்டக்களப்பு Advanced Technological Institute இன் Director Selvarethnam Jeyapalan B.Com(Hons), M.Com, கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தார். மற்றும் இந்நிகழ்வில் அதிதிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் Degree, HND, Diploma, மற்றும் Certificate level கற்கை நெறிகளில் மாணவர்கள் பட்டம் பெற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. காத்தான்குடி மற்றும் மருதமுனையை சேர்ந்த ஊடகவியலாளர்களான MSM. Sajee மற்றும் ALM.Shinas ஆகிய இருவரும் இந்நிகழ்வில் Thendral FM - SLBCஇன் Assistant Director Mrs. K.Nagapooshani அவர்களினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# புதிய சந்தைகளில் ஆர்வம் காட்டுவது பொருத்தமானது

இலங்கையின் இறக்குமதி வரி சதவீதத்தை 30 ஆக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்ததன் மூலம், நாட்டின் பொருளாதாரத் துறை தொடர்பில் பல்வேறு மட்டங்களிலும் கருத்தாடல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் கூற்றுப்படி, அமெரிக்க அரசாங்கத்துடன், மேலும் கலந்துரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் 30 சதவீத வரியை மேலும் குறைக்க முடியும். இதற்கிடையில், இலங்கை புதிய வெளிநாட்டு சந்தைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க கூறுகிறார்.

தற்போது, தேயிலை, மசாலாப் பொருட்கள், ஆடைகள், ரத்தினங்கள் மற்றும் இயற்கை ரப்பர் ஆகியவை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன, ஆனால் சில பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இலங்கையின் முன்னணி ஏற்றுமதிப் பொருளாக சில காலத்திற்கு முன்பு இருந்த இயற்கை ரப்பர், இப்போது மிகவும் அரிதாகவே ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாங்கள் தேங்காய்களை ஏற்றுமதி செய்தோம். அது எங்கள் முக்கிய வருமான ஆதாரமாக இருந்தது. இன்று நாம் வெளிநாட்டிலிருந்து தேங்காய்களை இறக்குமதி செய்கிறோம்.

தேயிலை வருவாய் மிகவும் உணர்திறன் வாய்ந்த விஷயம். தேயிலை சந்தை அவ்வப்போது ஏற்ற இறக்கமாக இருக்கும். ஒரு காலத்தில், ரஷ்யா நமது தேயிலை இலைகளில் ஒரு வண்டு இருந்ததால் நம்மிடமிருந்து தேநீர் வாங்குவதை நிறுத்தியது. அதேபோல், உலகில் போர் சூழ்நிலை ஏற்படும் போது, நமது தேயிலை வருவாயும் குறைகிறது. கூடுதலாக, மற்ற நாடுகளின் தரம் குறைந்த தேயிலைகள் நமது சொந்த தேயிலையுடன் கலப்பதால் இலங்கை தேயிலைக்கான தேவை குறைந்துள்ளது.

ஐரோப்பாவில் உள்ள அனைத்து குளிர் நாடுகளும் இலங்கை தேயிலையைக் கொள்வனவு செய்கின்றன. ஆனால், அந்த சந்தையின் உணர்திறன் காரணமாக, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தேயிலை கையிருப்பு இலங்கைக்குத் திரும்பி வருகிறது, அந்த தேநீரை நாமே குடிக்க வேண்டும் அல்லது சாயங்கள் தயாரிக்கப் பாகிஸ்தானுக்கு விற்க வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆரம்பத்தில் இலங்கைக்கு 44 சதவீத வரியைப் பரிந்துரைத்தார். இருப்பினும், அரசாங்கத்தின் தலையீட்டால், அதை 30 சதவீதமாகக் குறைக்கலாம். அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் மீதான ஏற்றுமதி வரியை இலங்கை எப்படியாவது அதிகரித்தால், அதற்கு சமமான 30 சதவீத வரியை அதிகரிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறியுள்ளார்.

இலங்கை அமெரிக்காவிற்கு செலுத்தும் இறக்குமதி வரி, அமெரிக்கா இலங்கைக்கு செலுத்தும் வரியை விட மிக அதிகம். அமெரிக்காவில் கணினிகள், இயந்திரங்கள் போன்றவை விலை உயர்ந்தவை என்பதால், நாம் சீனாவிலிருந்து அத்தகைய பொருட்களை வாங்குகிறோம். அதன்படி, அமெரிக்கா மீது விதிக்கப்படும் வரிகள் பூஜ்ஜியமாக இருந்தால், அமெரிக்காவும் நம் மீது விதிக்கப்படும் வரிகளைப் பூஜ்ஜியமாக்கும், அதன் பலன் இலங்கைக்கு அதிக பலனைத் தரும்.

உலகப் பொருளாதாரத்தில் பல நாடுகள் வாங்குபவர்களாக உருவாகி வருகின்றன. மால்டா மற்றும் ருமேனியா போன்ற நாடுகளின் மக்களிடம் நாம் நினைப்பதை விட அதிகப் பணம் உள்ளது. இந்த புதிய சந்தைகளில் ஆர்வம் காட்டுவது பொருத்தமானது. இதற்கிடையில், இலங்கையின் உள்நாட்டுத் தொழில்கள் அபிவிருத்தி செய்யப்பட்டால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் அளவைக் குறைக்க முடியும்.

தமிழ்Mirrorக்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அறியாமை என்பது மிகவும் பாரதூரமானது. அறியாமையில் புகுந்து கொள்ளும்போது, வாழ்க்கையின் அழகும் வதனமும் மறைந்து போகின்றன. நல்லதும் சிறப்பானதுமான சிந்தனைகளைச் சிரசில் ஏற்றாமல், தன்னறிவும் கிரகித்தல் அறிவும் இன்றி வாழ்ந்தால், புறக்கணிக்கக் கூடாத நற்பயன்கள், பெறுபேறுகளை இழந்துபோவதை அறியாமல் வாழவேண்டி வரும். இது ஒரு துர்ப்பாக்கிய நிலை.

எந்த ஒரு விடயத்தையும் அங்கீகரிக்க முன்னர், அதைப் பகுத்தறிந்து, சிந்தனைக்குள் புகுத்திக் கொள்ளவேண்டும்.

சின்னக் குழந்தைகள் கூட கேள்விகளைக் கேட்டு, எங்களைத் திக்குமுக்காடச் செய்கிறார்கள். எங்களது சந்தேகங்களுக்கு முழுமையாக விடை அறிய முடியா விட்டாலும் அதை அப்படியே விட்டுவிடுவதும் இல்லை. சில சமயங்களில், அவர்களின் கேள்விகளால் நாங்களும் ஆச்சரியப்படுகின்றோம்.

தெரியாத விடயங்களுக்குள் அமிழ்ந்து போதலாகாது. தெரியாத விடங்களில் முடிவு எடுப்பதும் முட்டாள் தனம். சிறந்த முறையில் பாதை அமைந்தால், ஆன்மாவும் களிப்படையும்.

ஆன்மாவும் கருமங்களும் ஒன்றுக்கொன்று இயைபுபட வேண்டும். சரியான விடயங்களால் தேகம் களிப்படைகின்றது. இதனால், விழிப்புநிலை தானாக மலரும். விருப்பத்துடன் செய்க; அதைச் சரியாகச் செய்க.

–பருத்தியூர் பாலவயிரவநாதன்

## கடிதங்கள்

### தபால் விநியோகம் இல்லாததால் அவதி

கண்டி - பன்விலை, கலாபொக்க அரச பெருந்தோட்ட யாக்கத்தினால் நிருவகிக்கப்படும் தோட்டங்களுக்கு நேரடி தபால் விநியோகம் இன்மையால் தோட்டப்புற மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

தோட்ட காரியாலயங்களில் தமக்குரிய தபால்கள் தேங்கிக்கிடப்பதாலும் உரிய நேரத்திற்கு அவசர கடிதங்களும் ஆவணங்களும் கிடைக்கப் பெறாமையாலும் காலாகாலமாக பல்வேறு வாய்ப்புகள் தோட்டப்புற இளைஞர், யுவதிகளுக்குக் கிடைக்கப் பெறாமல் சொல்லொணா துன்பங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மடுல்கலை தபால் நிலையத்தினரால் விநியோகிக்கப்படும் கடிதங்கள் மற்றும் ஆவணங்களை விநியோகிப்பதற்கு நேரடி தபால் விநியோக ஏற்பாடுகள் அங்கில்லை. இதன் காரணமாகத் தோட்ட நிர்வாகத்தால் கையேற்கப்படும் தபால்கள் பிரதான தோட்டக் காரியாலயத்தில் தேங்கிக் கிடப்பதாகவும் இவை உரியவாறு தோட்டப்புறங்களுக்கு விநியோகிக்கப்படுவதில்லையெனவும் பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் தலையிட்டு உடனடியாக இப்பிரச்சினையைத் தீர்த்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மடுல்கலை கலாபொக்க தோட்டப் பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

- மெய்யன

# செப்டெம்பர் அமர்வில் தமிழர் நிலைப்பாடு

லக்ஸ்மன்

செப்டெம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கின்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை அமர்வுக்குத் தமிழர்கள் தயாராக வேண்டிய நேரமாக இதனைக்கொள்ள வேண்டும். ஏனெனில், இந்த வருட அமர்வானது இலங்கையில் இடதுசாரி சித்தாந்தத்தின் கீழ் ஆட்சிக்கு வந்திருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது எதிர்கொள்ளல். அந்தவகையில்தான் இந்த அமர்வானது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொள்ளப்படுகிறது. அத்துடன், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரது விஜயம்.

சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் பல்வேறு வடிவங்களிலும் தங்களது முயற்சிகளை 2009 முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்குப் பின்னர் மறுக்கப்பட்ட உரிமைகளை அடைவதற்கான முயற்சிகளை நகர்த்தி வருகின்றனர். இருந்தாலும், 16 வருடங்களை எட்டிவிட்டபோதிலும் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு முடியாததாக சர்வதேச சமூகம் இருந்து வருகிறது. ஒவ்வொரு அமர்விலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இராஜதந்திர ரீதியாக இலங்கை அரசாங்கம் நகர்ந்து வருகிறது. இது தமிழர்கள் தங்களது எந்த முயற்சியையும் வெற்றியாக மாற்றிக் கொள்ளமுடியாத நிலையையே ஏற்படுத்துகிறது.

ஒவ்வொரு வருடத்திலும் இலங்கையில் மனித குலத்திற்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படும், ஏற்கெனவே இலங்கை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் வலுப்பெறும் என்றெல்லாம் நம்பியிருப்பது மாத்திரமே தமிழர்களுக்கு மிஞ்சியிருக்கிறது.

2009இல் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களின் போராட்டத்தைப் புதைத்ததுடன் ராஜபக்ஷ கூட்டணி இலங்கையின் ஏகாதிபத்தியவாதிகளாக தம்மை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சித்தனர். ஆனால், அதற்குள்ளிருந்த மைத்திரிபால சிறிசேனவை வெளியே எடுத்து அவரை ஜனாதிபதியாக்கி ரணில் விக்ரமசிங்க, மங்கள சமரவீர, சந்திரிகா பண்காரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட பெரும் கூட்டணி நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்தியது. இது மகிந்த ராஜபக்ஷ கூட்டணிக்கு பெரும் அடியாகவே அமைந்தது. இந்தச் சூழ்நிலையையும் தமக்குச் சாதகமானதாக்க முடிந்த மகிந்த அணி மைத்திரியை தமது வலைக்குள் கொண்டுவந்து பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க வெளிநாடு சென்றிருந்த வேளையில், மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிக் கொண்டது. இந்த பதவி மாற்றத்தினை தவறு என்று நீதிமன்றம் சென்று நிரூபித்துக் கொண்ட ரணில் தரப்பு மகிந்த ராஜபக்ஷவின் பிரதமர் பதவியை இல்லாமல் செய்தது,

அதன்பின்னர் உருவாக்கப்பட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன உள்ளூராட்சித் தேர்தலில் தொடங்கி ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. அதன்படி, கோட்டாபய ராஜபக்ஷ பெரும்பான்மை மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்ற ஜனாதிபதியானார். பாராளுமன்றம் பெரும்பான்மைபலத்துடன் அமைக்கப்பட்டது. ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆட்சி நடவடிக்கைக் காலம் கொவிட் பெருந்தொற்றுக் காலமாக இருந்தது. அக்காலத்தில் அவர் மேற்கொண்ட முடிவுகள் பெரும் பொருளாதார நெருக்கடிகளைக் கொண்டுவந்தது. அதன் காரணமாக 'அரகலய' போராட்டம் வெடித்து கோட்டாபய - ராஜபக்ஷ அரசாங்கம் இல்லாமல் செய்யப்பட்டது. நாட்டுக்குள் இருக்கும் போது, ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக அறிவித்தார். கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டுத் தப்பியோடி தனது பதவி விலகலை நாட்டுக்கு வெளியே இருந்து கொண்டே அறிவித்தார்.

நாட்டுக்கு வெளியே சென்று பதவி விலகலை அறிவித்த பின்னர், பாராளுமன்றத்தின் ஊடாக ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானார். அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டங்களை நடத்தியவர்கள், அரச சொத்துக்களைச் சேதப்படுத்தியவர்கள் என்ற குற்றச்சாட்டில் பலரை ரணில் ஆட்சிக்கு வந்ததும் கைது செய்தார், நடவடிக்கை எடுத்தார். அவ்வாறான செயற்பாடுகள் தவறு என்ற விமர்சனங்களை நாட்டுக்குள்ளும் வெளிநாடுகளிலும் உருவாக்கிக் கொண்டார். இருந்தாலும் அவற்றினை அவர் சமாளித்தும் கொண்டார். ஆட்சியை நடத்துதல், சட்டங்களை உருவாக்குதல், தேர்தல்களை நடத்தாது காலம் கடத்துதல் என நகர்ந்து கொண்டிருந்தார். அதன் பின்னர்தான் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிறது.

இந்த ஒழுங்கில் மகிந்த ராஜபக்ஷ தரப்பு யுத்தத்தினை முள்ளிவாய்க்காலில் புதைத்து மௌனிக்கச் செய்ததன் பின்னர் தமிழ்த் தரப்பு போர்க்குற்ற, இன அழிப்பு செயற்பாட்டுக்கு எதிராக நடவடிக்கைக்குத் தயாராகிக்கொண்டிருந்த வேளை, நல்லாட்சி என்ற பெயரில் ரணில் விக்ரமசிங்க, மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, இணை அனுசரணை வழங்கியது, ஆனால்,

கோட்டாபய ஜனாதிபதியானதும் அதிலிருந்து விலகிக் கொண்டார். பின்னர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானதும் மீண்டும் காலத்தைத் தாமதப்படுத்த இராஜதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அந்த வகையில்தான் கால இழுத்தடிப்பு நடைபெறுகிறது. அரசாங்கம் என்று பொதுவில் பார்த்தாலும் அரசாங்கங்களின் மாற்றத்தினை தமக்குச் சாதகமாக இலங்கை ஐக்கிய நாடுகள் சபையில் பயன்படுத்திக் கொண்டு வருகிறது. இப்போது மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களுக்கான காலத்தை மனித உரிமைப் பேரவையில் கோரும் என்பதே நிச்சயமானது.

இந்த நிச்சயத்தின் அடிப்படையைக் கொண்டுதான் செப்டெம்பருக்காக தமிழ்த் தரப்பு தயாராக வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை தொடர்பான விடயம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்டு காலம் தோறும் புதுப்புது தீர்மானங்கள் ஏற்படுத்தப்படுவதும் இலங்கை அரசு இணை அனுசரணை வழங்குவதும் காலங்கடத்துவதும் நடைபெறுகிறதே தவிர இற்றைவரை இத்தீர்மானங்கள் ஊடாக குறிப்பாக வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைக்கவில்லை என்பதே உண்மை. இவ்வாறான சூழ்நிலையில், ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி, காலம் தாழ்த்தலுக்கான நகர்வை மேற்கொண்டிருந்தது. அதேபோன்று, தற்போதைய அரசாங்கம் பொருளாதார ஸ்திரத் தன்மையைக் காரணம் காட்ட முயற்சிக்கிறது. மனித உரிமைகள் பேரவை அமர்வில் அரசின் கோரிக்கை சாதகமாகவே பரிசீலிக்கப்படும் என்பதற்கு அண்மையில் இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்காக நாட்டுக்கு வருகை தந்த மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் விஜயத்தின் முடிவில் வெளியிட்ட அறிக்கை இதற்கு ஒரு சாட்சியாகும். இதில் முக்கியம் என்னவென்றால், தமிழ் மக்களின் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்கக் கூடிய ஆரோக்கியமான விடயங்கள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என்பதுதான்.

நீண்டகாலமாக நாட்டில் புரையோடிப்போயிருக்கின்ற தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்விற்குரிய பொறிமுறையை முன்வைக்காத அரசாங்கத்தின் உள்ளக பொறிமுறை என்ற கண்துடைப்பில்தான் சர்வதேசம் நம்பிக்கை கொண்டிருக்கிறதா? என்றும் இந்த இடத்தில் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

அந்த வகையில்தான், கண்துடைப்புகளாலேயே காலத்தை நகர்த்தும் அரசாங்கத்திற்கும், சர்வதேசத்திற்கும் தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகவே கொள்ளப்பட வேண்டும் என்பதும் நினைவூட்டப்பட வேண்டும் என்பதும் முக்கியமானது. உண்மை, நீதி, நல்லிணக்கம், மீள் நிகழாமை என வெளிப்பேச்சுக்கு நகரும் இலங்கை அரசின் உண்மை முகத்தைத் தோலுரித்துக் காட்டுவதற்கான சந்தர்ப்பமாக இந்த 2025 செப்டெம்பர் அமர்வினை தமிழர் தரப்பு பயன்படுத்துவது கட்டாயமானது.

இலங்கை அரசாங்கம் கூறிவருகின்ற உள்ளகப் பொறிமுறையானது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக அமையப் போவதில்லை. மாறாக, சர்வதேச பொறி முறைகள் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பது தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்தாலும் அது கவனிக்கப்படாததாக இருந்து வருகிறது.


அதேநேரம், இலங்கைக்கு உள்ளேயும், சர்வதேசத்திலும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்ற சர்வதேச பொறிமுறையை விடுத்து, இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு உள்ளக நெறிமுறைகள் ஊடாகவே தீர்வினை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்துப்படி, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்ரர் ரார்க் கருத்து வெளியிட்டமையானது, வெறுமனே ஒதுக்கி விடக்கூடியதொன்றல்ல. அத்துடன், இதுவே செப்டெம்பர் அமர்விலும் பிரதிபலிக்கும் என்பது தமிழர் தரப்புக்கு நினைவில் இருத்தல் வேண்டும்.

இதனை அடியொட்டியே வருகிற செப்டெம்பர் மனித உரிமைகள் பேரவை அமர்வுக்கான நகர்வுகள் அமைதல் வேண்டும்.

பிரித்தானியர் ஆட்சியில் இருந்து சுதந்திரம் வழங்கப்பட்டமை முதல் இலங்கையில் தமிழ் மக்கள் எதிர் நோக்கிவருகின்ற பிரச்சினைக்குரிய தீர்வு உள்நாட்டு பொறிமுறை ஊடாக நிறைவேற்றப்படாது என்பதுவே உறுதியானது. அதனைக் கடந்து, சர்வதேச நீதிப்பொறி முறையே பொருத்தப்பாடானது என்பதாக அந்த நிலைப்பாடு இருக்க வேண்டும்.

# கொட்டாவயில் Prime Groupஇன் "Skye Blossom"










கொட்டாவ நகரின் அபிவிருத்தி மற்றும் நகரமயமாக்கல் செயற்பாடுகளுக்கு மத்தியில், Prime Lands தனது புதிய அபிவிருத்தித் திட்டமான 'Skye Blossom Kottawa' இன் நிர்மாணத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தை அண்மையில் முன்னெடுத்தது. "உங்களுடன் வளர்ச்சியடையும் இல்லம்" ('A Home that grows with you.') எனும் கோட்பாட்டுக்கமைய நிர்மாணிக்கப்படும் இந்த இல்லத் தொகுதி, கொட்டாவ பகுதியில் நவீன வாழ்க்கை அனுபவத்தை வழங்குவதாக அமைந்திருக்கும்.

அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டதுடன், அத்துடன் Skye Blossomஇன் நிர்மாணப் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகின. கொட்டாவ நகரின் தோற்றக் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையிலும், பிரத்தியேகமான வாழிட அனுபவத்தை பின்பற்றியும் இந்த நிர்மாணத் திட்டம் அமைந்திருக்கும் என்பதுடன், விறுவிறுப்பான மற்றும் பிரத்தியேகமான சமூகத்துக்கு புதிய நியமங்களை ஏற்படுத்தி சிறந்த வாழ்க்கை பயணத்தை முன்னெடுக்க வழிகோலுவதாகவும் அமைந்திருக்கும்.

இந்த வைபவத்தில் Prime Groupஇன் தவிசாளர் மற்றும் இணை தலைமை அதிகாரி ஆகியோருடன் விசேட விருந்தினர்கள் மற்றும் பெருமைக்குரிய எதிர்கால உரிமையாளர்கள் ஆகிய பலரும் கலந்து கொண்டனர். உறுதியான அடித்தளத்துடன், Skye Blossomஇன் நிர்மாணப் பணிகள் உயர் தர நியமங்கள் மற்றும் தங்கியிருக்கும் திறன் ஆகியவற்றை உறுதி செய்து முன்னெடுக்கப்படும்.

Prime Lands (Pvt) Ltdஇன் பிரதம நிறைவேற்று அதிகாரி ருமிந்த ரந்தெனிய கருத்துத் தெரிவிக்கையில், "Skye Blossom இன் அடிக்கல் நாட்டலுடன், இலங்கையின் நவீன நகர வாழிட அனுபவத்தின் எதிர்காலத்தை நாம் அறிமுகம் செய்கிறோம். இல்லம், உங்களுடன் வளர்ச்சியடைய வேண்டும் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் Skye Blossom அமைந்திருக்கும், வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் பின்பற்றும் வகையில் அமைந்திருக்கும். Prime Lands இன் புத்தாக்கமான கொடுப்பனவு தீர்வுகள் மற்றும் நெகிழ்ச்சியான உரிமையாண்மை தெரிவுகள் போன்றன தரமான வாழ்க்கையை அணுகுவதை இலகுவாக்கியுள்ளது. தமது வசிப்போருடன் மேம்படும் இல்லங்களை உருவாக்குவதற்கான எமது உறுதியான அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இது அமைந்துள்ளது." என்றார்.

கொட்டாவ நகரின் மையப்பகுதியில் இரண்டு 16 அடுக்கு டவர்களில் நிர்மாணிக்கப்படுவதுடன், பசுமையான, இயற்கை அம்சங்கள் நிறைந்த பெல்கனிகளையும் கொண்டிருக்கும். நீண்ட கால அடிப்படையில் பெறுமதி அதிகரிக்கும் வகையில் Skye Bl ossomவடிவமைக்கப்பட்டுள் ளதுடன், 975 sqft – 1375sqft வரையான அளவுகளில் 2 மற்றும் 3 படுக்கையறை அலகுகளை கொண்ட ஒப்பற்ற வசிப்பிட அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும். இல்லங்களுக்கிடையே பாரம்பரியமாக காணப்படும் வரையறைகளை மாற்றியமைத்து, நீடித்து நிலைத்திருக்கும் தொலைநோக்குடனான அம்சங்களைக் கொண்ட Prime Lands இன் நோக்கத்தின் வெளிப்பாடாக Skye Blossomஅமைந்திருக்கும்.

வதிவோரின் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களுக்கும் பொருந்தக்கூடிய உள்ளம்சங்களைக் கொண்டதாக கவனமான முறையில் Skye Blossomஇன் நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கொட்டாவ பகுதியின் மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து இணைப்பு, வளர்ந்து வரும் வணிக உட்கட்டமைப்பு மற்றும் குடும்பத்துக்கு நட்பான சூழல் போன்ற அம்சங்களை உள்வாங்கி மூலோபாய ரீதியில் Skye Blossomஅமைந்துள்ளதுடன், கொழும்பின் வணிகப் பகுதிகள், கல்வி நிலையங்கள் மற்றும் பொழுதுபோக்கு பகுதிகளை இலகுவாக சென்றடையக்கூடிய வசதியையும் வழங்குகிறது. மஹாரகம நகரம், தர்மபால கல்லூரி மற்றும் கொட்டாவ அதிவேக நெடுஞ்சாலை இடம்மாறல் ஆகியவற்றுக்கு அண்மையில் Skye Blossom அமைந்துள்ளது.

# கொமர்ஷல் வங்கியின் 'வடக்கினை வலுப்படுத்தல்'

நாட்டின் டிஜிட்டல் மாற்ற நிகழ்ச்சி நிரலை ஆதரிப்பதற்கும் தனது முதன்மை டிஜிட்டல் வங்கி தளமான 'கொம்பேங்க் டிஜிட்டல்' மூலம் பிராந்திய ஈடுபாட்டை அதிகரிப்பதற்கும் அதன் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஷவடக்கினை வலுப்படுத்துதல்/டிஜிட்டல் சிறப்பை துரிதப்படுத்துதல் என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் டிஜிட்டல் விழிப்புணர்வு முயற்சி திட்டமொன்றினை கொமர்ஷல் வங்கி நடத்தியது.

திண்ணை ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வை, வங்கியின் டிஜிட்டல் வங்கிப் பிரிவு, வட பிராந்திய அலுவலகம் மற்றும் மையப்படுத்தப்பட்ட செயல்பாட்டு பிரிவுகளின் ஆதரவுடன் ஏற்பாடு செய்திருந்தது. இதில் வாடிக்கையாளர்கள், சிரேஷ்ட வங்கி அதிகாரிகள் மற்றும் பல்வேறு வர்த்தக பிரிவுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த அமர்வு, கொம்பேங்க் டிஜிட்டல் இன் அம்சங்கள் மற்றும் சேவைகள் மற்றும் வங்கியின் பிற டிஜிட்டல் தயாரிப்புகளின் முழு நோக்கம் குறித்து பங்கேற்பாளர்களுக்கு தகவல்கள் மற்றும் அறிவினை வழங்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டிருந்ததுடன், அணுகலை உறுதி செய்வதற்காக தமிழ் மொழியில் செயல்விளக்கங்கள் மற்றும் விளக்கக்காட்சிகள் வழங்கப்பட்டன. மேலும் இந்த அமர்வானது பிராந்தியத்தில் தனிநபர்கள், SME யினர் மற்றும் நிறுவனங்களுக்கான நிதியியல் செயல்திறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த, பில் செலுத்துதல்கள் முதல் H2H (Host-to-Host) மற்றும் ComBank Trade Link போன்ற மேம்பட்ட சேவைகள் வரை அன்றாட நிதியியல் நடவடிக்கைகளில் தளங்களை எவ்வாறு தடையின்றி ஒருங்கிணைக்க முடியும் என்பதை காட்சிப்படுத்தியது.

விளக்கக்காட்சியைத் தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் விருந்துபசார நிகழ்விலும் பங்கேற்றதுடன் இது வங்கி பிரதிநிதிகளுடன் நேரடியாக உரையாடலில் ஈடுபடவும், கொம்பேங்க் டிஜிட்டல் உடன் நேரடி அனுபவத்தைப் பெறவும், கருத்துக்களை வழங்கவும் வாய்ப்பளித்தது. இந்த ஊடாடும் வடிவமானது சில்லறை நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்கள் தொடர்பான டிஜிட்டல் வங்கி தீர்வுகள் குறித்த வாடிக்கையாளர் புரிதலை மேலும் ஆழப்படுத்த உதவிய அதே வேளை வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட புத்தாக்கத்திற்கான வங்கியின் உறுதிப்பாட்டின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தியதாகவும் வங்கி தெரிவித்துள்ளது.



இந்த முயற்சி தொடர்பாக கருத்து தெரிவித்த வங்கியின் தனிநபர் வங்கிப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் எஸ். கணேசன், 'எமது டிஜிட்டல் திறன்களை வாடிக்கையாளர்களின் வாசலுக்கு எடுத்துச் செல்வதே எமது மாற்றத்திற்கான பயணத்தின் நோக்கமாகும். இந்த முயற்சிகள் மூலம், எமது தளங்களை நாம் காட்சிப்படுத்துவதுடன் மட்டுமல்லாமல், ஒவ்வொரு வாடிக்கையாளரும் - பிராந்தியத்தைப் பொருட்படுத்தாமல் - எமது மிகவும் மேம்பட்ட டிஜிட்டல் கருவிகளிலிருந்து பயனடையத் தயாராக இருப்பதை உறுதி செய்கிறோம். இது போன்ற நிகழ்வுகள் உள்ளூர் தேவைகளை நிவர்த்தி செய்ய உதவுகின்றன, மேலும் டிஜிட்டல் பயன்பாடானது புதிய வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளில் மாற்றத்தை ஊக்குவிக்கின்றது.'

# இரண்டாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு - 2025

என். நிசன்குமார் கோபிநாத்,
முதலாம் வருடம்,
கலைப் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.



இரண்டாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கடந்த ஜூன் மாதம் 14,15ஆம் திகதிகளில் இடம்பெற்றது..

உயர் பட்டப்படிப்புக்கள் பீடமும், யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தின் கல்வியியல் துறையும் இணைந்து இந்த ஆய்வு மாநாட்டை ஒழுங்கமைத்திருந்தன.

"நிலைபேண்தகு கல்விக்கான புதுமையான நடைமுறைகளை வெளிப்படுத்துதல்: சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" என்ற தொனிப்பொருளை அடிப்படைக் கருவாக இந்த மாநாடானது கொண்டிருந்தது.

இந்த ஆய்வு மாநாட்டுக்கென பல்வேறு துறைசார் ஆய்வாளர்களினால் சுமார் 200 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றுள் 140 கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட ஆய்வு கட்டுரைகளைத் தேசிய கல்வி நிறுவகம், பேராதனை, கொழும்பு, மொறட்டுவ மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள், உயர் பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் சமர்ப்பித்திருந்தனர்.

அத்துடன், இந்தியப் பல்கலைக்கழகங்களின் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களாலும் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டமை முக்கியமான அம்சமாகும்.

இந்த மாநாட்டின் இரண்டு தினங்களும் காலை அமர்வுகள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கைலாசபதி அரங்கிலும் மாலை அமர்வுகள் உயர் பட்டபடிப்பு பீடத்திலும் நடைபெற்றன. காலை அமர்வுகள் சம்பிரதாய விடயங்கள், திறவுகோல் உரைகள் மற்றும் புலமைத்துவ கலந்துரையாடல்களை உள்ளடக்கியிருந்தன. மாலை அமர்வுகளில் ஆய்வாளர்களால் ஆய்வுகள் முன்வைப்புச் செய்யப்பட்டன. எட்டு ஆய்வு மையங்களில் பல்வேறு ஆய்வுத் தடங்களை உள்ளடக்கியதாக இம் முன்வைப்புக்கள் அமைந்திருந்தன.

முதலாம் நாள் நிகழ்வுகள் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா முன்னிலையில் உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி மற்றும் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர்.சி.ரகுராம் இணைந்து தலைமை வகிக்க நடைபெற்றது.

நிகழ்வின் சிறப்பம்சமாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் முதலாவது அணி மாணவனும் அவுஸ்திரேலியாவின் கிறிவித் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான கலாநிதி செல்வா செல்வநாதன், கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கபிலபண்டார திறவுகோல் உரைகளை ஆற்றினர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜெ.பிரட்லீ ஆகியோர் சிறப்பு அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக பேராசிரியர்கள், கல்வித்துறை சார் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் பார்வையாளர்களாகத் திரண்டிருந்தனர்.

திறவுகோல் உரையில் பேராசிரியர் செல்வா செல்வநாதன், பல்கலைக்கழக கல்வியில் இரட்டைத் தகமை கொண்ட பட்டப்படிப்பு தொடர்பான தேவைப்பாடுகள் தொடர்பாக ஆழமாகக் குறிப்பிட்டார். எதிர்வரும் காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணப் பிரதேசங்களைக் கல்வி ரீதியில் எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பதுடன் அந்த அபிவிருத்தியினை சமூக அபிவிருத்தியாக எவ்வாறு மாற்றுவது என்பது தொடர்பாகவும் மிகவும் தெளிவான முறையில் தனது கருத்துக்களை மிகவும் நேர்த்தியாக முன்வைத்தார்.

பேராசிரியர் கபில பண்டார, தத்துவார்த்த ரீதியில் 21ஆம் நூற்றாண்டுக்கான கல்விப் புலத்தினரை தயார் செய்வது தொடர்பில் ஆழமான கருத்துக்களை முன்வைத்தார். குறிப்பாக, கல்வி உலகில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களை உதாரணங்களுடன் சுட்டிக்காட்டிய அவர் எதிர்காலத்தில் கல்வி உலகின் செல்நெறிகுறித்து எதிர்வு கூறும் முகமாகத் தனது உரையைக் கட்டமைத்திருந்தார்.

இரண்டாம் நாள் காலை அமர்வுகள் பாடசாலை கல்வி மற்றும் உயர் கல்வியின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான கருப்பொருள் செயலமர்வாக நடைபெற்றன. "கலைத்திட்ட சீர்திருத்த அமலாக்கத்தை ஆதரிக்க டிஜிட்டல் கருவிகளில் ஆசிரியர் திறனை வளர்ப்பதற்கான தேவைகள்" என்ற தொனிப்பொருளில் திறந்த பல்கலைக்கழக பேராசிரியர் எப்.எம்.நவஸ்தீனும், கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீடத்தின் மூத்த விரிவுரையாளர் எஸ்.அதிரதன் "கிராமப்புறப் பள்ளிகளுக்கான கல்வி தொழில்நுட்பம்" எனும் தலைப்பிலும் திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே. கேதீஸ்வரன், "இலங்கையில் உள்ளங்கள் கல்விக்கான கொள்கை கட்டமைப்புகள்" தொடர்பாகவும் விரிவாகக் கருத்துக்களை முன்வைத்தனர்.

கலாநிதி தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெற்ற உயர்கல்வி தொடர்பான கருப்பொருள் செயலமர்வில் "உயர்கல்வியில் சமகாலப் பிரச்சினைகள்" தொடர்பாகவும். பேர்தனை பல்கலைக்கழகக் கலாநிதி சிவமோகன் சுமதியால் "அரசியல் மற்றும் கல்விக் கொள்கை குடிமக்களிடமிருந்து பண்டமாக" எனும் தலைப்பிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. அகிலன் கதிர்காமர், "பல்கலைக்கழகங்களின் பணமதிப்பிழப்பு மற்றும் தனியார்மயமாக்கலுக்கான அழுத்தம்" எனும் தலைப்பிலும் பேர்தனை பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ஷாமலாகுமார் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தலைவர் கலாநிதி கௌசல்யா பெரேராவால் "பல்கலைக்கழகங்களில் விமர்சன விசாரணை மற்றும் ஈடுபாட்டை வளர்ப்பதற்காகப் படிநிலைகளை அகற்றுதல்" தொடர்பாகவும் தர்க்க ரீதியாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி டாக்டர் ரம்யா குமார மற்றும் ருஹூணு பல்கலைக்கழகத்தின் கலாநிதி டாக்டர் அருணி சமரக்கோன் "நவதாராளவாதத்தின் உச்சக்கட்டத்தில் இலங்கையின் இலவசக் கல்விக் கொள்கையை மறுபரிசீலனை செய்தல் நெருக்கடி அல்லது மாறுவதற்கான விடயம் தொடர்பாகவும் அதில் உயர் கல்வி சம்பந்தமான பிரச்சினைகளும் அதன் எதிர்கால முன்னேற்றம்" என்ன தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கல்வியியல் சர்வதேச ஆய்வு மாநாட்டின் இறுதி மதிப்பீட்டுச் செயல்முறையில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் சண்முகலிங்கம் மற்றும் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை ஆய்வு மாநாடு பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

குறிப்பாக, பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கல்வியியல் ஆய்வுகள் பிராந்திய மயமாகவும் எதிர்கால பயன்களை விளைவிக்கத்தக்கதாகவும் அமைய வேண்டும் என்பதை சுட்டிக்காட்டினார். அத்துடன் எதிர்காலத்தில் கல்வியியல் பிரச்சினை மாத்திரமல்லாமல், அதற்கான தீர்வுகளும் ஆராயப்பட வேண்டும் என்றும் கூறினார்.

பேராசிரியர் என். சண்முகலிங்கம் புதிய ஆய்வு நுட்ப முறைகள், ஆய்வின் முக்கியத்துவம் என்பன தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடினார்.

இறுதியாக ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.









பாகிஸ்தான்

### எஃகு ஆலை திட்டம்

# பாகிஸ்தான்-ரஷ்யா ஒப்பந்தம்

பாகிஸ்தான் எஃகு ஆலையை மீண்டும் தொடங்கவும், நவீனப்படுத்தவும் பாகிஸ்தான்-ரஷ்யா இடையில் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

சோவியத் யூனியன் உதவியுடன கட்டப்பட்ட பாகிஸ்தான் எஃகு ஆலை ஒப்பந்தத்திற்காக சீனாவும் போட்டியிட்டது.

ஆனால், மாஸ்கோவில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பாகிஸ்தான்-ரஷ்யா இடையில் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.



இந்தத் திட்டம் எஃகு உற்பத்தியை மீண்டும் தொடங்கி விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகவும், இது இருதரப்பு ஒத்துழைப்பில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிப்பதாகவும் கூறப்படுகிறது.

பீஜிங்

### தேனீக்ககளை

## உளவாளியாகும் விஞ்ஞானிகள்

தேனீக்களின் மூளையைக் கட்டுப்படுத்தி, அவற்றை நம் இஷ்டத்துக்கு பயணிக்க வைக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது.

உயிரினங்களை கருவிகள் வாயிலாக கட்டுப்படுத்தும், 'சைபோர்க்' என்ற தொழில்நுட்பம் தொடர்பாக பல நாடுகள் ஆராய்ச்சி செய்து வருகின்றன. இந்த வகையில், தேனீயின் மூளையை கட்டுப்படுத்தி, நம் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தும் முயற்சியில், சீனாவைச் சேர்ந்த பீஜிங் தொழில்நுட்ப மையத்தின் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக, 74 மில்லி கிராம் எடையுள்ள சிறிய கருவியை உருவாக்கியுள்ளனர். இதில் உள்ள சிறிய ஊசிகள், தேனீயின் மூளையைக் கட்டுப்படுத்தும். எந்த இடத்தில் இருந்தும், தேனீயின் இயக்கத்தை கண்காணிக்க முடியும். நம் உத்தரவுகளுக்கு ஏற்ப, அதன் இயக்கத்தையும் மாற்ற முடியும்.

இதுவரை நடந்துள்ள ஆய்வுகளில், விஞ்ஞானிகளின் உத்தரவுகளில், 90 சதவீதத்தை தேனீக்கள் நிறைவேற்றி உள்ளன. பேரிடர் காலங்களில் மற்றும் பயங்கரவாத தாக்குதல்களின்போது, மனிதர்கள் உடனடியாக செல்ல முடியாத இடங்களுக்கு இதுபோன்ற தேனீக்களை அனுப்பி, அங்குள்ள நிலவரத்தை தெரிந்து கொள்ள முடியும் என, விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதற்கு முன், ஆசிய நாடான சிங்கப்பூரைச் சேர்ந்த விஞ்ஞானிகள், இதுபோன்ற மிகவும் எடை குறைந்த கருவியை உருவாக்கி இருந்தனர். தற்போது சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளது, அதைவிட, மூன்றில் ஒரு பங்கு எடை மட்டுமே கொண்டது.

இருப்பினும் இந்த கருவி, தொடர்ந்து செயல்படுவதற்கு மின்சார வசதி தேவை. அதனால், கருவியுடன் பேட்டரியை இணைப்பது தொடர்பாக, தொடர் ஆய்வுகள் நடந்து வருகின்றன. எதிர்காலத்தில், ராணுவ உளவுப் பணிகளுக்கும் இதுபோன்ற தேனீக்களை பயன்படுத்த முடியும் என கூறப்படுகிறது.

தெஹ்ரான்



### 5 இலட்சம்

## ஆப்கானியர்களை வெளியேற்றியது ஈரான்

ஈரானுக்குள் சட்டவிரோதமாக புலம்பெயர்ந்து தங்கி, கூலி வேலை உள்ளிட்ட பல்வேறு வேலைகளை பார்த்து வந்த 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆப்கானியர்கள், கடந்த 16 நாட்களில் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் 12 நாட்கள் நீடித்த போரானது, ஜூன் 24இல் முடிவுக்கு வந்தது. இந்நிலையில், போர் நிறுத்தம் துவங்கிய நாளிலிருந்து ஈரானில் உரிய ஆவணங்கள் இன்றி சட்டவிரோதமாக தங்கியுள்ள, தன் அண்டை நாடான ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்களை வெளியேற்றும் நடவடிக்கையை ஈரான் அரசு தீவிரப்படுத்தயுள்ளது.

கடந்த 9ஆம் திகதி வரை, 5 இலட்சத்து 8,426 ஆப்கானியர்கள் அவர்களின் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக சர்வதேச புலம்பெயர்ந்தோர் அமைப்பு தெரிவித்துள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில் நடந்த மக்களின் கட்டாய வெளியேற்றங்களில் இதுவே மிகப் பெரியது என ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

புலம்பெயர்ந்த ஆப்கானியர்கள், ஈரானின் முக்கிய நகரங்களான டெஹ்ரான், இஸ்பஹான் ஆகிய இடங்களில் கூலி வேலை உள்ளிட்டவற்றில் ஈடுபட்டவர்கள். அதில் சிலர் இஸ்ரேலிடம் பணம் பெற்று, உளவு பார்த்ததாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனால், புலம்பெயர்ந்த ஆப்கானியர்களால் தேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என கூறி அவர்களை வெளியேற்றத் துவங்கினர். இதனால், குடும்பத்துடன் ஈரானில் வசித்த பெண்கள், குழந்தைகள் தற்போது வீடுகளை இழந்து, ஆப்கானிஸ்தானின் இஸ்லாம் காலா நகர முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

தமிழ்நாடு

### திமுக ஆட்டியில் இடம்பெற்ற

## பொலிஸ் விசாரணையில் 24 கொலைகள்

### நிவாரணம் வழங்குமாறு விஜய் கோரிக்கை

மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் கொலை சம்பவத்துக்கு எதிராக கண்டனம் தெரிவித்து நடிகரும் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவருமான விஜய் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (13) அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இந்தப் போராட்டத்தில் விஜய் பேசுகையில்,

அஜித்குமாரின் குடும்பத்தினருக்கு முதல்வர் ஸ்டாலின் `சாரி' கேட்டது தப்பில்லை. ஆனால், உங்கள் ஆட்சியில் பொலிஸ் விசாரணையில் 24 பேர் உயிரிழந்துள்ளனர். அந்த 24 பேரின் குடும்பத்தினரிடமும் நீங்கள் சாரி சொன்னீர்களா? அஜித்குமார் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட நிவாரணம்போல, இந்த 24 பேரின் குடும்பத்தினருக்கு நிவாரணம் அளித்தீர்களா?

சாத்தான்குளம் ஜெபராஜ் - பென்னிக்ஸ் கொலை வழக்கை சிபிஐ-க்கு மாற்றியது, காவல்துறைக்கு அவமானம் என்றீர்கள். ஆனால், நீங்களும் அதைத்தான் செய்துள்ளீர்கள். அதே ஆர்எஸ்எஸ், பாஜகவின் கைப்பாவையாகத்தான் சிபிஐ இருக்கிறது. நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை வேண்டும் என்று தவெக கோரியதால்தான், நீங்கள் ஒன்றியத்தின் பின்னால் ஒளிந்து கொண்டீர்கள்.

அண்ணா பல்கலை. விவகாரம் முதல் அஜித்குமார் கொலை வழக்கு வரையில் நீதிமன்றம் தலையிட்டு, உங்கள் அரசை கேள்விக் கேட்கிறது.

நீதிமன்றம் தலையிட்டு



கேள்வி கேட்க வேண்டுமென்றால், நீங்கள் எதற்கு? உங்கள் ஆட்சி எதற்கு? உங்களின் முதல்வர் பதவி எதற்கு? எந்தக் கேள்விக்கும் உங்களிடம் பதில் இல்லை. இருந்தால்தானே பதில் வரும்.

`சாரி மா' என்ற பதில் மட்டும்தான் உங்களிடம் இருந்து வரும். தெரியாம நடந்துருச்சு மா, நடக்கக் கூடாதது நடந்துருச்சு மா - அவ்வளவுதான்.

வெற்று விளம்பர மொடல் திமுக சர்கார், தற்போது `சாரி மா' மாடல் சர்காராக மாறிவிட்டது. நீங்கள் ஆட்சியைவிட்டு செல்லும் முன், பரிகாரமாக சட்டம் ஒழுங்கை சரிசெய்ய வேண்டும்; இல்லையெனில், சரிசெய்ய வைப்போம். அதற்கான அனைத்து போராட்டங்களும் தவெக சார்பில் நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

# விம்பிள்டன்: சம்பியனான ஸ்வியாடெக்

விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் உலகின் நான்காம் நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக் சம்பியனாகியுள்ளார்.

சனிக்கிழமை (12) அன்று நடைபெற்ற ஐக்கிய அமெரிக்காவின் அமந்தா அனிசிமோவாவை எதிர்கொண்ட போலந்தின் ஸ்வியாடெக், 6-0, 6-0 என்ற நேர் செட்களில் வென்று சம்பியனானார்.

தனது அரையிறுதிப் போட்டியில் சுவிற்ஸர்லாந்தின் பெலிந்தா பென்சிச்சை 6-2, 6-0 என்ற நேர் செட்களில் ஸ்வியாடெக்கும், முதல்நிலை வீராங்கனை அர்யனா சபலெங்காவை 6-4, 4-6, 6-4 என்ற செட் கணக்கில் வென்று அனிசிமோவாவும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தனர்.



### இங்கிலாந்து எதிர் இந்தியா:

## சமநிலையில் மூன்றாவது டெஸ்ட்

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியானது சமநிலையில் காணப்படுகின்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இங்கிலாந்தும், இரண்டாவது போட்டியை இந்தியாவும் வென்ற நிலையில் லோர்ட்ஸில் வியாழக்கிழமை (10) ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஜோ றூட்டின் 104, பிறைடன் கார்ஸின் 56, ஜேமி ஸ்மித்தின் 51, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸின் 44, ஒலி போப்பின் 44 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 387 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஜஸ்பிரிட் பும்ரா 5, நிதிஷ் குமார் ரெட்டி 2, மொஹமட் சிராஜ் 2, இரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, லோகேஷ் ராகுலின் 100, றிஷப் பண்டின் 74, ஜடேஜாவின் 72 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 387 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் கிறிஸ் வோக்ஸ் 3, ஜொஃப்ரா ஆர்ச்சர் 2, ஸ்டோக்ஸ் 2, ஷொய்ப் பஷிர் 1, பிறைடன் கார்ஸ் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து, மூன்றாம் நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி இரண்டு ஓட்டங்களைப் பெற்றுள்ளது.



## இலங்கை கால்பந்தாட்ட அணியில் குவேதா

■ எஸ்.கீதபொன்கலன்



இலங்கையின் 20 வயதுகுட்பட்ட பெண்கள் தேசிய கால்பந்து அணிக்கு தெரிவான திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மாணவி தயாபரன் குவேதா, பங்களாதேஷ் பயணமானார்.

பங்களாதேஷில் நடைபெறும் 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தெற்காசிய கால்பந்தாட்டத் தொடருக்கான இலங்கைக் குழாமிலேயே குவேதா இடம்பிடித்துள்ளார்.

“இப்பயணத்தில் தனக்கு கிடைக்கும் வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்தி இலங்கை அணிக்காக வெற்றியை பெற்று தருவதோடு திருகோணமலை மண்ணுக்கும் நிச்சயம் பெருமை சேர்ப்பேன்” என்று குவேதா கூறியுள்ளார்.

### அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில்

## முன்னிலையில் மேற்கிந்தியத் தீவுகள்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டின் முதல் நாள் முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் முன்னிலையில் காணப்படுகின்றது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்ற அவுஸ்திரேலியா தொடரை ஏற்கெனவே கைப்பற்றிய நிலையில், ஜமைக்காவில் ஞாயிற்றுக்கிழமை (13) நள்ளிரவு ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் பற் கமின்ஸ் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அவுஸ்திரேலிய அணியில் கடந்த போட்டியில் விளையாடிய நேதன் லையனை ஸ்கொட் போலண்ட் பிரதியிட்டத்துடன், மேற்கிந்தியத் தீவுகளில் கிறேய்க் பிறத்வெய்ட்டை மிகைல் லூயிஸ் பிரதியிட்டதுடன், அன்டர்சன் பிலிப்பை ஜோமெல் வொரிக்கான் பிரதியிட்டிருந்தார்.



முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ஜஸ்டின் கிரேவ்ஸ் (3), ஷாமர் ஜோசப்(4), ஜேடன் சியல்ஸிடம்(3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 225 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஸ்டீவன் ஸ்மித் 48, கமரன் கிறீன் 46 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள் முதல் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 16 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பிரண்டன் கிங் எட்டு ஓட்டங்களுடனும், அணித்தலைவர் றொஸ்டன் சேஸ் மூன்று ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

## உதயசூரியன் கிண்ணத்தை தனதாக்கியது சென்.மேரிஸ்



■ பூ.லின்ரன்

வடமராட்சி கிழக்கு கால்பந்தாட்டக் கழகங்களுகிடையே வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடாத்திய கால்பந்தாட்டத் தொடரில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

உதயசூரியன் மைதானத்தில் சனிக்கிழமை(12) அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் அருணோதயா விளையாட்டுக் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றே சென். மேரிஸ் சம்பியனானது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 14, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.